# வெற்றிக்கு வழி குழுமம் மற்றும் திறன்வளர் ஆசிரியர் மன்றம்
# 10ஆம் வகுப்பு மாதிரி பொதுத்தேர்வுக்கான விடைக்குறிப்பு 2022 - 23
# தமிழ்

## பகுதி - I

| **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (விடையினை குறியீட்டுடன் எழுதுக)** | | **15 X 1 = 15** |
|---|---|---|
| 1. | (ஆ) தளரப் பிணைத்தால் | 1 |
| 2. | (அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது | 1 |
| 3. | (இ) கருணையன், எலிசபெத்துக்காக | 1 |
| 4. | (ஈ) பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை | 1 |
| 5. | (இ) பால் வழுமைதி, திணை வழுமைதி | 1 |
| 6. | (ஈ) கல், மரம், காடுமேடு | 1 |
| 7. | (ஆ) 3, 1, 4, 2 | 1 |
| 8. | (ஈ) அனைத்தும் | 1 |
| 9. | (இ) இடையறாது அறப்பணி செய்தலை | 1 |
| 10. | (ஆ) ஏவல் வினா, வினா எதிர் வினாதல் விடை | 1 |
| 11. | (இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு | 1 |
| 12. | (அ) சிலப்பதிகாரம் | 1 |
| 13. | (ஈ) இளங்கோவடிகள் | 1 |
| 14. | (ஆ) அகில், சந்தனம் | 1 |
| 15. | (அ) நெய்பவர் | 1 |

## பகுதி - II

### பிரிவு - 1

| **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.<br>வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** | | **4 X 2 = 8** |
|---|---|---|
| 16. | **இயல் – 2 : செ–முல்லைப்பாட்டு**<br>❋ **பொருள்** - திருமால்<br>❋ **இலக்கணக்குறிப்பு** - இசைநிறை அளபெடை (அ) செய்யுளிசை அளபெடை | 1<br>1 |
| 17. | **விடைக்கேற்ற வினா : (பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>அ) தானியம் ஏதும் இல்லாத நிலையில் எவ்வாறு விருந்தளித்தாள் தலைவி?<br>ஆ) தமிழினத்தின் பொதுச்சொத்து என ம.பொ.சி. எதை கூறுகிறார்? | 1<br>1 |
| 18. | **இயல் – 4 : செ–பெருமாள் திருமொழி**<br>நோயாளியின் நோயைப் போக்குவதில் மருந்துகள் மட்டுமின்றி மருத்துவரின் அன்பான, நம்பிக்கையான வார்த்தைகளும், நோயாளியின் நோயை விரைவாக குணப்படுத்தும்.<br>மருத்துவரின் அன்பு + நோயாளியின் நம்பிக்கை + மருந்துகள் = விரைவில் குணமடைதல் | 2 |
| 19. | **இயல் – 6 : உ–நிகழ்கலை**<br>படம் வெளிப்படுத்தும் நிகழ்த்துக்கலை **கரகாட்டம்** ஆகும்.<br>❋ ‘கரகம்’ என்னும் பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம் ஆகும்.<br>❋ கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி, ஆடுபவரின் தலையில் நன்கு படிய செய்கின்றனர்.<br>❋ தலையில் செம்பு நிற்க மணலையோ பச்சரிசியையோ நிரப்புகின்றனர்.<br>❋ கண்ணாடியாலும், பூக்களாலும் அழகூட்டிய கரகக்கூட்டின் நடுவில், கிளி பொம்மையைப் பொருத்திய மூங்கில் குச்சியைச் செருகி வைத்து ஆடுகின்றனர்.<br>❋ நையாண்டி மேள இசை, நாகசுரம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றது.**(கரகாட்டம் தொடர்பான 2 குறிப்புகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 2 |

| | | |
|---|---|---|
| 20. | **இயல் – 8 : உ–சங்க இலக்கியத்தில் அறம்**<br>**அவையம் :**<br>✱ அறம் கூறும் மன்றங்களே அவையம் எனப்பட்டன.<br>✱ இவை அரசனின் அறநெறி ஆட்சிக்கு துணை புரிந்தன. | <br><br>1<br>1 |
| 21. | **இயல் – 3 : வாழ்வியல் – திருக்குறள்**<br>அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்<br>பெருமை முயற்சி தரும். - **திருவள்ளுவர்.** | 2 |
| | **பிரிவு - 2** | |
| | **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** | **5 X 2 = 10** |
| 22. | **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல் :**<br>*காகத்திற்கு**க்** காது உண்டா? அதற்கு**க்** காது கேட்குமா?*<br>எல்லா**ப்** பறவைகளுக்கும் காது உண்டு. செவி**த்**துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்ற_படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புற**ச்**செவிமடல் இருக்காது. காகத்திற்கு**க்** காது உண்டு. காது_ கேட்கும். | 2 |
| 23. | **பகுபத உறுப்பிலக்கணம் :**<br>தணிந்தது = தணி + த்(ந்) + த் + அ + து<br>தணி - பகுதி<br>த் - சந்தி, 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - சாரியை<br>து - படர்க்கை வினைமுற்று விகுதி | 2 |
| 24. | **இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்தல் :**<br>அ) வளி(காற்று)- வாளி : பெரு**வளி**யால் கிணற்றின் மேலிருந்த **வாளி** கீழே விழுந்தது.<br>ஆ) கொள் - கோள் : நாம் வாழும் **கோள்**-ஆன பூமியைப் பற்றி நீ தெரிந்து **கொள்**.<br>**(பொருத்தமான தொடர் அமைத்திருந்தால் மதிப்பெண் வழங்குக)** | <br>1<br>1 |
| 25. | **இயல் – 6 : உ–அகப்பொருள் இலக்கணம்**<br>**ஐவகை நிலங்களின் சிறுபொழுதுகள் :**<br>**திணை** – **சிறுபொழுது**<br>குறிஞ்சி – யாமம்<br>முல்லை – மாலை<br>மருதம் – வைகறை<br>நெய்தல் – எற்பாடு<br>பாலை – நண்பகல் | 2 |
| 26. | **கலைச்சொல் :**<br>அ) Consulate - துணைத்தூதரகம்<br>ஆ) Monolingual - ஒரு மொழி | <br>1<br>1 |
| 27. | **தமிழ் எண்கள் :**<br>ஞாயிற்றுக்கிழமை - 10 - ***க0***<br>புதன்கிழமை - 13 - ***க௩***<br>சனிக்கிழமை - 16 - ***க௬*** | <br><br>1<br>1 |
| 28. | **தனிச் சொற்றொடர் :**<br>ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் **கட்டிக்கொள்வர்.** காலில் சலங்கை **அணிந்து கொள்வர்.** கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப **வீசி ஆடுவர்.** | 2 |

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2 X 3 = 6

29. **இயல் – 4 : உ–செயற்கை நுண்ணறிவு**

மனிதன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள்.

* **திறன்பேசி வரைபடம்** : நாம் செல்லும் வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தால், அதற்கான மாற்றுப்பாதை கண்டறிவது போன்ற பல வசதிகள் உள்ளடக்கியது.
* **கூகுள்** : நாம் அறியா வார்த்தைகளை, செய்திகளை கணினியில் பதிவிட தன் தரவுகளில் ஒப்பிட்டு அதைப்பற்றின விவரங்களை கால் நொடிக்கும் குறைவான நேரத்தில் திரையில் காண்பிக்கிறது.
* **பல்வேறு இயந்திரங்கள்** : வானொலி, தொலைக்காட்சி, மின் விளக்குகள், துணி துவைக்கும் இயந்திரம், மாவு அறைக்கும் இயந்திரம், மின் சமைப்பான், குளிர்சாதனப் பெட்டி, மிதிவண்டி, பேருந்து, மகிழுந்து, புகைவண்டி, வானூர்தி ஆகியன நம் வாழ்க்கை முறையை எளிமைப்படுத்தியுள்ளது.

மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் உள்ளன. அதற்கேற்ப நாம் அறிவியல் கண்டுபிடிப்புகளை சரியாக பயன்படுத்தினால், அது நம்மை மேம்படுத்தும்.

**(பொருத்தமான 3 கண்டுபிடிப்புகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக)** — 3

30. **உரைப்பத்தி வினா :**

அ) **மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும்** அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. — 1

ஆ) **நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும்** அதனை **அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும்** அரசனின் கடமை ஆகும். — 1

இ) குற்றங்களை, **அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும்** என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார். — 1

31. **இயல் – 7 : உ–சிற்றகல் ஒளி**

**“தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்”**

**<u>இடம்</u> :** சென்னையை ஆந்திராவிலிருந்து பிரித்தெடுத்தல் தொடர்பான மாநகராட்சி சிறப்புக் கூட்டமொன்றில், சென்னையை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து, **ம.பொ.சி.** அவர்கள் கூறிய முழக்கம் இது.

**<u>பொருள் :</u>** உயிரைக் கொடுத்தேனும் தலைநகரான சென்னையைக் காக்க வேண்டும்.

**<u>விளக்கம் :</u>** ஆந்திர மாநிலம் பிரியும் போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். அப்போது மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூடிய மாநகராட்சி சிறப்புக் கூட்டமொன்றில், சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து ம.பொ.சி. அவர்கள் ‘தலைநகரான சென்னையை உயிரைக் கொடுத்தேனும் காத்திடுவோம்’ என்று முழங்கினார். — 3

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2 X 3 = 6**

32. **இயல் – 3 : செ–மலைபடுகடாம்**

**கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தும் முறைகள் :**

- பகலில் இளைப்பாறி செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள்.
- ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.
- மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப் பாதையில் சென்று, மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.
- அங்குள்ளவர்களிடம் நன்னனின் கூத்தர்கள் என கூறி, உரிமையுடன் அவர்கள் வீட்டிற்குள் நுழையுங்கள். உறவினர்கள் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர்.
- நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் பெறுவீர்கள்.

**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக)** — 3

33. **இயல் – 8 : செ–காலக்கணிதம்**

***'கவிஞன் யானோர் காலக் கணிதம்' என்ற கண்ணதாசனின் கவிதையில் என்னை கவர்ந்த தொடர்கள்:***

| தொடர் | காரணம் |
|---|---|
| "மாற்றம் எனது மானிடத் தத்துவம்" | மாற்றம் காண்பது எனது மனிதத் தன்மையின் தத்துவமாகும் என்று நமக்கோர் செய்தி சொல்லி நகர்ந்துபோன விதம் நம்மைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. |
| "எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை என்ப தறிந்து ஏகுமென் சாலை" | என் வழியில் எவை தீமை, எவை நன்மை என்பதை அறிவேன் என்னும் இவ்வரிகள் எனக்கு பிடித்தவையாகும். |
| "தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்; தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்" | நம்மை ஆட்சி செய்யும் தலைவர் மாறலாம், ஆட்சி மாறலாம், ஆனால் மாற்றம் என்னும் தத்துவம் மட்டுமே நிலையானது என்று கூறியது மிகவும் அருமை. |
| "கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!" | மற்றவர் என்ன நினைப்பார்கள் என்று எண்ணினால் அவன் கவிஞன் அல்லன். ஏற்றுக் கொள்வோர் ஏற்றுக்கொள்ளட்டும். இகழ்ந்து பேசுவோர் பேசட்டும் என்று துணிந்து செயலாற்றினால்தான் நிலைத்திருக்க முடியும் என்று அழுத்தமாக சொன்னதால் இத்தொடர் என்னைக் கவர்ந்துள்ளது. |
| "நானே தொடக்கம்; நானே முடிவு; நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!" | முதலும் நானே, முடிவும் நானே, நான் கூறுவதே இந்நாட்டின் சட்டம் என்று கவிஞர் கூறுவது வீரத்தை வெளிப்படுத்துகிறது. |

**(பொருத்தமான 3 தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக)** — 3

| | | |
|---|---|---|
| 34. | **அடிபிறழாமல் எழுதுக.**<br>**அ) இயல் - 5 : திருவிளையாடற்புராணம்**<br>புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்<br>பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்<br>நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்<br>தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா. - **பரஞ்சோதி முனிவர்**<br>**(அல்லது)**<br>**ஆ) இயல் - 6 : கம்பராமாயணம்**<br>வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்<br>பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்<br>மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ<br>ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான். - **கம்பர்** | 3 |

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 X 3 = 6**

| | | |
|---|---|---|
| 35. | **இயல் – 7 : இ–புறப்பொருள் இலக்கணம்**<br>***புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகள் :***<br>❋ வெட்சித்திணை x கரந்தைத் திணை<br>❋ வஞ்சித்திணை x காஞ்சித்திணை<br>❋ நொச்சித்திணை x உழிஞைத்திணை | 1<br>1<br>1 |
| 36. | **இயல் – 9 : இ–அணி** | 3 |

| அணி சுட்டல் | தன்மை அணி |
|---|---|
| அணி இலக்கணம் | எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மை அணி ஆகும். |
| பாடலின் பொருள் | உடம்பு முழுவதும் தூசியும், விரிந்த கருமையான தலைமுடியும், கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை நதிபாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான். அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிர் நீத்தான். |
| அணிப் பொருத்தம் | கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களில் கூறியதால் இது தன்மை நவிற்சி அணி எனப்படும். |

| | | |
|---|---|---|
| 37. | **இயல் – 8 : இ–பா–வகை, அலகிடுதல்** | 3 |

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| வே / லொடு | நேர் நிரை | கூவிளம் |
| நின் / றான் | நேர் நேர் | தேமா |
| இடு / வென் | நிரை நேர் | புளிமா |
| றது / போ / லும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கோ / லொடு | நேர் நிரை | கூவிளம் |
| நின் / றான் | நேர் நேர் | தேமா |
| இரவு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா **'பிறப்பு'** என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** | 5 X 5 = 25

38. (அ) **இயல் – 7 : செ–மெய்க்கீர்த்தி** (மையக்கருத்துடன் 3 நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக) — 5

### மெய்க்கீர்த்திப் பாடலின் நயம்

**முன்னுரை**

பாடப்பகுதியில் சோழ மன்னன் இரண்டாம் இராசராச சோழனின் பெருமைகளையும் வரலாற்றையும் கூறும் மெய்க்கீர்த்தி கொடுக்கப்பட்டுள்ளது. அப்பாடலின் நயத்தை விரிவாகக் காணலாம்.

**மெய்க்கீர்த்தி - பொருள் :**

மெய்க்கீர்த்தி = மெய் - உண்மை, கீர்த்தி - புகழ்: அரசாண்ட மன்னனின் உண்மையான புகழை எடுத்துரைக்கும் இலக்கியமே மெய்க்கீர்த்தி. இது கல்வெட்டில் எழுதப்பட்டிருக்கும்.

**மையக்கருத்து :**

இரண்டாம் இராசராச சோழனின் ஆட்சிச்சிறப்பினையும் அவன் ஆட்சி செய்த நாட்டின் வளத்தைப் பற்றியும் விளக்குகிறது.

**பொருள் நயம் :**

இப்பாடலின் பொருள்கள் மறைபொருளாக ஒப்பிடும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடலின் ஆசிரியர் சோழ நாட்டின் இயற்கை வளத்தில் இருப்பதை கூறி அவை மக்களிடம் இல்லாதிருப்பதை குறிப்பிட்டு அதன் வழியே நாம் பொருள் உணர்ந்து கொள்ளச் செய்யும் நயம் மிகச் சிறப்பாகப் பொருந்தி உள்ளது.

**உதாரணமாக,**

- மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன, மக்கள் வடுப்படுவதில்லை.
- மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன, மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை.
- காடுகள் மட்டுமே கொடியுடையதாய் உள்ளன, மக்கள் கொடியவராய் இல்லை.
- நெற்கதிர்கள் மட்டுமே போராக எழுகின்றன, போர் என்பதே நாட்டில் இல்லை.

**தொடைநயங்கள் :**

- **மோனை நயம்** : ஒரு பாடலில் அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.
  - **சீர்மோனை** : **நி**ன்றுகாவல் - **நி**னையாது; **நெ**றிபூண்டு - **நெ**றியல்லது; **த**ந்தையில்லோர்-**த**ந்தையாகியுந்; **தா**யாரில்லோர்-**தா**யராகியும்; **மை**ந்தரில்லொரு - **மை**ந்தராகியும்
  - **அடிமோனை** : **மா**வே – **மா**மலரே; **கா**வுகளே - **க**ள்ளுண்பன; **இ**யற்புலவரே-**இ**சைப்பாணரே;
- **எதுகை நயம்** : ஒரு பாடலில் அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
  - **சீர் எதுகை** : நெ**றி**பூண்டு - நெ**றி**யல்லாது; த**ந்**தையில்லோர் - த**ந்**தையாகியுந்; தா**யா**ரில்லோர் - தா**ய**ராகியும்; மை**ந்**தரில்லொரு - மை**ந்**தராகியும்
  - **அடி எதுகை**: இ**ந்**திரன் - வ**ந்**தடி; ப**ழி**யானையே – வ**ழு**மணிச்சிலம்பே; க**யி**ற் - இ**யி**ற்; எ**ன்**று கூறி – நி**ன்**றுகாவல்; வி**ழி** – மொ**ழி**;

**அணி நயம் :** உவமையணி

**முடிவுரை**

சோழமன்னன் இரண்டாம் இராசராசசோழனின் பெருமைகளை அவன் நாட்டின் இயற்கை வளத்தை எடுத்துக்கூறி அதன் வழியே எடுத்துரைத்திருப்பது போற்றுதலுக்குரியது. இப்பாடல் எளிதில் பொருள் கொள்ளும்படியாகவும் சந்த நயத்தோடும் இயற்றப்பட்டிருக்கிறது.

(அல்லது)

(ஆ)

**இயல் – 1 : செ–இரட்டுற மொழிதல்**

**தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கு :**

| பாடல் | தமிழ் | கடல் |
|---|---|---|
| *முத்தமிழ் துய்ப்பதால்* | மூன்று + தமிழ்; இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது. | முத்து + அமிழ்; கடல் முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது. |
| *முச்சங்கம் கண்டதால்* | தமிழானது முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம் பாஞ்சசன்யம் ஆகிய மூன்று சங்குகளை கடல் தருகிறது. |
| *மெத்த வணிகலமும் மேவலால்* | ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது. | மிகுதியான வணிகக்கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. |
| *நித்தம் அணைகிடந்தே சங்கத்தவர் காக்க* | சங்கப்புலவர்கள் தமிழை காத்தனர். (சங்கத்தவர் - சங்கப்புலவர்கள்) | கடல் அலை சங்கினை காக்கிறது. (சங்கத்தவர் - சங்கினைத் தடுத்தல்) |
| *ஆழிக்கு இணைகிடந்தே தேதமிழ்* | இவ்வாறாக, தமிழையும் கடலையும் இரட்டுற மொழிதல் பாடல்வழி தமிழழகனார் ஒப்பிடுகிறார். | |

5

39. (அ)

**தோழனை வாழ்த்தும் கடிதம்**

**5, கம்பர் தெரு**
**திருச்சி - 5**
**01.12.2022** ½

**அன்புத்தோழன் ஜீவா,** ½

வணக்கம்.

நான் நலம். நீ நலமா? உன் பெற்றோர் நலமா? உன் இல்லத்திலுள்ள அனைவரின் நலமும் அறிய ஆவலாக உள்ளேன். உன் பேச்சாற்றலால் நீ பல போட்டிகளில் பங்கு கொண்டு வருகிறாய். உன் திறமையால் பல பரிசுகளைக் குவித்து வைத்திருக்கிறாய். அதனை எண்ணும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

உன் திறமைக்கு மகுடம் சூட்டியதைப்போல அண்மையில் "மரம் இயற்கையின் வரம்" என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றிருப்பது 'உன் அறிவுத்திறனுக்குக் கிடைத்த பரிசு' என்று எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். 2

தொடர்ந்து நீ போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும். வெற்றி உனக்குக் கிட்டும்! உன் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெற வாழ்த்துகிறேன். இக்கடிதத்துடன் உனக்கு ஒரு நூலைப் பரிசாக அனுப்பியுள்ளேன். வரும் விடுமுறையில் சந்திப்போம்.

நன்றி!

**இப்படிக்கு**
அன்புத்தோழி, 1
க. வளர்மதி.

**உறைமேல் முகவரி**

ந. ஜீவா,
த/பெ. நலங்கிள்ளி, 1
20, பாரதியார் நகர்,
சேலம் - 10.

| | | |
|---|---|---|
| | **(அல்லது)** | |
| (ஆ) | **கடிதம்**<br>**அனுப்புநர்**<br>ம.கனிமொழி,<br>24, பாரதியார் தெரு, குமரேசபுரம்,<br>திருச்சிராப்பள்ளி.<br>**பெறுநர்**<br>ஆசிரியர் அவர்கள்,<br>தினமணி நாளிதழ்,<br>திருச்சிராப்பள்ளி.<br>**மதிப்பிற்குரிய ஐயா,**<br>**பொருள் :** பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற கட்டுரையை வெளியிட வேண்டுதல் தொடர்பாக.<br>வணக்கம். திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறேன். தங்கள் நாளிதழில் பொங்கல் மலருக்கு 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதி அனுப்புமாறு கொடுத்திருந்த விளம்பரத்தை பார்த்தேன். அத்தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதி இக்கடிதத்துடன் இணைத்துள்ளேன்.<br>'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றார் பாரதி. உழவைத்தான் முதலில் வைத்து போற்றுவர் தமிழ் மக்கள். உழவர் திருநாளான பொங்கல் அன்று நீங்கள் வெளியிடும் மலரில் உழவுத் தொழிலின் பெருமை மற்றும் உழவர்களின் முக்கியத்துவத்தைக் கூறும் எனது கட்டுரையை வெளியிடுமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.<br>**நன்றி**<br>**இப்படிக்கு,**<br>கனிமொழி<br>**இடம் :** திருச்சிராப்பள்ளி<br>**நாள் :** 01.12.2022<br>**இணைப்பு :** "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" கட்டுரை நகல்<br>**உறைமேல் முகவரி**<br>பெறுநர்<br>ஆசிரியர் அவர்கள்,<br>தினமணி நாளிதழ்,<br>திருச்சிராப்பள்ளி. | ½<br>½<br>½<br>½<br>1½<br>½<br>½<br>½ |
| 40. | **படம் உணர்த்தும் ஐந்து கருத்துகள் :**<br>உதவி, தானம், ஈகை போன்றவை தொடர்பான 5 தொடர்கள் எழுதியிருந்தால் முழு மதிப்பெண் வழங்குக. | 5 |

41. **படிவம் :**

## நூலக உறுப்பினர் படிவம்

**திருச்சிராப்பள்ளி** மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் **மைய நூலகம் - திருச்சி மாவட்டம்**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் | உறுப்பினர் எண் 578980

1. பெயர் : **ம. கனிமொழி**
2. தந்தை பெயர் : **ப. மணிவண்ணன்**
3. பிறந்த நாள் : **27.11.2007**
4. வயது : **15**
5. படிப்பு : **பத்தாம் வகுப்பு**
6. தொலைபேசி எண் : **9777765000**
7. முகவரி : **க.எண் 28/590, காந்தி நகர்,**

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) : **பாலக்கரை, திருச்சி – 630 002.** 5

நான் **திருச்சி மைய** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவுசெய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ **20 /-** சந்தா தொகை ரூ **10 /-** ஆக மொத்தம் ரூ **30 /-** ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : **திருச்சி** தங்கள் உண்மையுள்ள,

நாள் : 01.12.2022 **ம. கனிமொழி.**

திரு / திருமதி / செல்வி / செல்வன் **ம. கனிமொழி** அவர்களை, எனக்குத் தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

அலுவலக முத்திரை (மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி/மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

**(வினாத்தாளில் வழங்கப்பட்டுள்ள விபரங்களுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு முழு மதிப்பெண்கள் வழங்குக)**

| | | |
|---|---|---|
| 42. (அ) | **புயலின்போது நாம் செய்யும் செயல்கள் :**<br>❋ புயலின்போது வெளியே செல்ல மாட்டோம்.<br>❋ வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறுவோம்.<br>❋ மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே தங்குவோம்.<br>❋ தொலைபேசி, மின்சாதனங்களின் இணைப்பைத் துண்டித்து பயன்படுத்துவதைத் தவிர்ப்போம்.<br>❋ தேவையான, மெழுகுவர்த்தி, தீப்பெட்டி போன்றவைகளைச் சேகரித்து வைத்துக்கொள்வோம்.<br>❋ காற்று வீசுவது நின்றாலும் வெளியே செல்லாமல், வானொலியில் சொல்லும் அறிவுரைகளை பின்பற்றி நடப்போம்.<br>**(பொருத்தமான 5 தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக)** | **5** |
| | **(அல்லது)** | |
| (ஆ) | **மொழிபெயர்ப்பு :**<br>மலர் : தேவி, நீ அறையை விட்டுச் செல்லும் போது எரியும் விளக்குகளை அணைத்துவிடு.<br>தேவி : ஆம், நாம் மின்சாரத்தைச் சேமிக்கவேண்டும்.<br>மலர் : நமது நாடு இரவில் தெருக்கள் ஒளிர்வதற்காக அதிக மின்சாரத்தைச் செலவு செய்கிறது.<br>தேவி : யாருக்குத் தெரியும்? எதிர்காலத்தில் நமது நாடு இரவுநேர ஒளிக்கு செயற்கை நிலவுகளை விண்ணில் ஏவலாம்!<br>மலர் : மிக விரைவில், சில நாடுகள் இந்த வகையான ஒளியூட்டும் செயற்கைக் கோள்களை ஏவப்போகின்றன என்று நான் படித்திருக்கிறேன்.<br>தேவி : அருமையான செய்தி, அவ்வாறு நாம் செயற்கை நிலவுகளை ஏவினால், பேரிடர் நேரங்களில் மின்சாரம் இல்லாத பகுதிகளில் வெளிச்சம் தர அவை உதவும். | **5** |
| **குறிப்பு : செவிமாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினா** | | |
| | (i) ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும்.<br>(ii) இலையின் வேறு பெயர்கள் : தாள், தோகை மற்றும் ஓலை<br>(iii) எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் இலையைக் குறிக்க Leaf(லீ∴ப்) என்னும் ஒரேசொல் உள்ளது. ஆனால் தமிழில் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்துள்ளனர்.<br>(iv) தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.<br>(v) தலைப்பு - தமிழ்சொல்வளம் | **1**<br>**1**<br>**1**<br>**1**<br>**1** |

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 X 8 = 24**

43. (அ) **இயல் – 2 : உ–கேட்கிறதா என் குரல்!** (8)

**அ) மையக்கருத்து :**

இப்பாடலில் கவிஞர் குழந்தையின் இயற்கை அழகை வருணித்து பாடியுள்ளார். அண்ணன்-தங்கை உறவின் உன்னதத்தை நயமாக வெளிப்படுத்தும் பாடலாக இப்பாடல் அமைந்துள்ளது. குழந்தையைத் தாலாட்டும் பாடலாக, குழந்தையைக் காற்றாக வருணித்து இப்பாடலைக் கவியரசர் எழுதியுள்ளார்.

**ஆ) கவிதை நயம் / பொருள் நயம் / திரண்ட கருத்து :**

பாடல் வரி : ***மலர்ந்தும் மலராத பாதிமலர் போல வளரும் விழி வண்ணமே***

**விளக்கம்** : பூவின் மலர்ந்தும் மலராத நிலை ‘போது’. அதை ‘பாதி மலர்’ என்கிறார் கண்ணதாசன். பூவானது முழுமையாக மலர்ந்து விட்டால், எப்போது வாடுமோ? என்ற அச்சம் இருக்கும். மொட்டாக இருந்துவிட்டால், எப்போது மலரும்? என்ற ஏக்கம் இருக்கும். ஆனால் மலர்ந்து கொண்டே இருந்தால் மகிழ்ச்சி அதிகரித்துக்கொண்டே இருக்கும். குழந்தையின் முகத்தில் எப்போதும் மகிழ்ச்சியையே காண விரும்பிய கண்ணதாசனின் கவிநயம் போற்றுதலுக்குரியது.

பாடல் வரி: ***வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக விளைந்த கலை அன்னமே***

**விளக்கம்** : விடிந்தும் விடியாத காலைப்பொழுது அனைவருக்குமே புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளிக்கக்கூடியது. அப்படிப்பட்ட காலைப் பொழுதாக குழந்தையை உருவகப்படுத்தி உள்ளார். வெண்மை நிறம் உள்ளத் தூய்மையைப் புலப்படுத்தும். அப்படிப்பட்ட அழகு மிக்க, வெண்மை நிறம் படைத்த அன்னப் பறவையாக குழந்தையை உருவகப்படுத்திப் பாடியுள்ளார்.

பாடல் வரி : ***நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளம் தென்றலே***

**தென்றலாய் தவழும் குழந்தை** : நதியிலே கலந்து, கரைந்து, எழுந்து, நீந்திக் குளித்து விளையாடி, அங்குள்ள பல்வகை நறுமணமிக்க மலர்கள் தாங்கிய கொடிகளில் தலையைத் துவட்டி, தலைசீவி, அழகுபடுத்தி, இளந்தென்றலாய் நடந்துவருகிறது குழந்தை என உருவகப்படுத்திப் பாடுகிறார், கண்ணதாசன்.

பாடல் வரி : ***பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு பொலிந்த தமிழ் மன்றமே***

**விளக்கம்** : பொதிகை மலையில் தோன்றி, மதுரை மாநகரில் வளர்ந்த தமிழ் போல குழந்தை வளர வேண்டும் என்று அழகு தமிழாக குழந்தையை உருவகப்படுத்தியுள்ளார் கவிஞர்.

**இ) தொடை நயங்கள் :**

➔ **மோனை நயம்** : செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை நயமாகும்.

♣ ***எ.கா :*** **ம**லர்ந்தும்– **ம**லராத; **வி**டிந்தும்– **வி**டியாத– **வி**ளையாத; **ந**தியில்– **ந**டந்த;

➔ **எதுகை நயம்** : செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது எதுகை நயமாகும்.

♣ ***எ.கா :*** ம**ல**ர்ந்தும் - ம**ல**ராத; வி**டி**ந்தும் - வி**டி**யாத

➔ **இயைபு நயம்** : ஒரு செய்யுளின் அடிதோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றிவரத்தொடுப்பது இயைபுத் தொடையாகும்.

♣ ***எ.கா.*** வண்ண**மே**, அன்ன**மே**, மன்ற**மே**

➔ **முரண் தொடை** : செய்யுளில், சொல் அல்லது பொருள் முரண்பட்டு நயம் பயக்கும் வகையில் அமைவது முரண் தொடை ஆகும்.

♣ ***எ.கா :*** **மலர்ந்தும் × மலராத, விடிந்தும் × விடியாத**

**ஈ) அணி நயம்** : மலர்ந்தும் மலராத பாதி மலர் போல – **‘உவமை அணி’.**

**குறிப்பு : மாணவர்கள் சுயமாக சிந்தித்து எழுதுவதற்கேற்ப மதிப்பெண்கள் வழங்கலாம்.**

**(அல்லது)**

(ஆ) **இயல் – 9 : உ–ஜெயகாந்தம் (நினைவு இதழ்)** — 8

**ஜெயகாந்தன் தன்படைப்புகளைத் தனித்தன்மையில் தருபவர்**

**முன்னுரை**

அனைத்து துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்த ஜெயகாந்தன் அவர்களின் தனித்தன்மையைப் பற்றி விரிவாகக் காணலாம். கருத்தாழமும், சுவையும் கொண்ட படைப்புகளை மக்களிடம் கொண்டு சேர்க்குமாறு இவரது நடையும் போக்கும் தனித்தன்மை வாய்ந்தவை.

**ஜெயகாந்தனின் பன்முகத்தன்மை :**

- ✱ சமகால நிகழ்வுகளில், சமகால மொழியில், சமகால உணர்வுகளை அறிந்து தடம் பதித்தவர்.
- ✱ சிறுகதை, புதினம், திரைப்படம், முன்னுரை, பேட்டி எனப்பல துறைகளில் தடம் பதித்துள்ளார்.
- ✱ சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டி, நேர்முக எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர்.

**ஜெயகாந்தன் எழுதுவதற்கான காரணங்கள் :**

- ✱ அவர் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும், காரணமும் உண்டு.
- ✱ 'தான் எழுதுவது முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்துதான் பெறும் கல்வியின் விளைவும், தனி முயற்சியின் பயனுமாகும்' என ஜெயகாந்தன் குறிப்பிடுகிறார்.
- ✱ அறியாமையால் அவஸ்தைகளுக்கு உள்ளாகி, பிறரையும் அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன் என கூறுகிறார்.

**முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன் :**

- ✱ எழுத்தாளரின் படைப்பு நோக்கத்தையும், படைப்பின் தன்மையையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை ஆகும்.
- ✱ தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்கும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.

**ஜெயகாந்தனின் 'இன்னுமொரு முகம்' கவிதை :**

- ✱ ஜெயகாந்தன் சில கவிதைகளையும், திரைப்பாடல்களையும் படைத்திருக்கிறார். அவரது படைப்பாற்றலின் இன்னொரு பக்கம் அதுவாகும்.
- ✱ பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் பற்றிய அவரின் கவிதை,

*"எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை*
*கண்ணீரும் பாடலில் கலந்திருக்கும்.*
*பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் - பழைய*
*மண்ணின் வாடையும் சேர்ந்துவரும்"*

- ✱ இப்பாடல் மூலம் பாமரனைப் பாடுவதிலும், எழுதுவதிலும் இருவருமே ஒரே கருத்துடையவர்கள் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை என்பது தெளிவாகிறது.

**சிறுகதையில், தனித்தன்மை வெளிப்படுத்தும் நுணுக்கங்கள் :**

"நுணுக்கமா? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப் பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சனைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சனைகளே" என ஜெயகாந்தன் பதிலளித்தார்.

**முடிவுரை**

ஜெயகாந்தனின் மாற்றுச் சிந்தனைகள் சமூகத்தில் அவரைத் தனித்து அடையாளம் காட்டுகின்றன. பள்ளிக்கல்வி அளவே படித்திருந்த இவர் தமிழ் இலக்கிய உலகில் மிகப் பெரிய ஆளுமையாகப் பார்க்கப்படுகிறார். எல்லாத்தரப்பு மொழி இலக்கியங்களையும் கற்றிருந்தார். வாழ்க்கையை அழகாகப் படித்துணர்ந்து அவற்றைத் தம் வார்த்தைகளில் அழகுறப் படைத்துள்ளார்.

44. (அ)

**இயல் – 3 : து–கோபல்லபுரத்து மக்கள்**

**பசித்தவருக்கு உணவிடுதலும், விருந்தினருக்கு உணவிடுதலும்**

**முன்னுரை**

"இட்டு கெட்டவர் யாரும் இல்லை" என்று கூறுவார்கள். அந்தளவிற்கு தானமும் தர்மமும் தலைகாக்கும் என்பது மரபு. இக்கட்டுரையில் 'பசித்தவருக்கு உணவிடுதல்' என்ற அறச்செயலையும் 'விருந்தினருக்கு உணவிடுதல்' என்ற பண்பாட்டுச் செயலையும் பற்றி காண்போம்.

**தமிழர்களின் விருந்தோம்பல் :**

தமிழர்களின் தலைசிறந்த பண்பாடுகளுள் ஒன்று விருந்தினருக்கு உணவிடும் விருந்தோம்பல் பண்பாகும். உலகத்தில் வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாத அளவில் தமிழரின் விருந்தோம்பல் இருக்கும். தமிழர்கள் முன்பின் அறியாத புதியவர்களையும் விருந்தினராக உபசரிக்கும் பண்புடையவர்கள்.

**விருந்தோம்பல் என்னும் பண்பாட்டுச் செயல் :**

விருந்தாளிகளை வாசல் வரை சென்று இன்முகத்துடன் வரவேற்பர். வீட்டிற்கு நுழையும் முன் கைகால்களை கழுவ வைத்து, விருந்தினரை இன்சொல் பேசி நலம் விசாரித்து முதலில் தண்ணீர் பருக வழங்கி, பின் இனிப்புகளை வழங்குவர். பிறகு அவர்களுக்கு உணவு சமைத்து வாழையிலையில் முறையாக உணவுகளை வைத்து விருந்தளிப்பர். அவர்கள் உண்ட இலையினை உபசரிப்பவர்களே எடுப்பதும், கை கழுவ நீரை ஊற்றுவதும் தனி சிறப்பாகும். பின்பு அவர்களுடன் அன்பாக உரையாடி வாசல் வரை சென்று வழியனுப்பி வைப்பார்கள்.

**நான் செய்த விருந்தோம்பல் :**

விடுமுறையில் என் தாத்தா-பாட்டி வீட்டிற்கு நானும் என் குடும்பமும் சென்றோம். அப்போது கோவில் யாத்திரை சென்றவர்களுக்கு என் தாத்தா-பாட்டி இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு இரவு தங்குவதற்கு இடம் அளித்து, உணவும் கொடுத்து சிறப்பாக உபசரித்தனர். அப்போது 'விருந்தினர்கள் வரும் காலம் அறிந்து அவர்களுக்கு உணவும், உறைவிடமும் தந்து உபசரிப்பதுதான் தமிழரின் பண்பாடு' என்று என் தந்தை கூறினார். **8**

**பசித்தவருக்கு உணவிடுதல் :**

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற ஆன்றோர் வாக்குக்கு இணங்க பசித்தவருக்கு உணவளிப்பது என்பது சிறந்த ஒரு அறச்செயல் ஆகும். உயர்ந்த புண்ணியம் என்கிறது மதங்கள். பசியோடும் களைப்போடும் வருபவர்களுக்கு எவ்வித எதிர்ப்பார்ப்புமின்றி தம்மிடம் இருப்பதை பகிர்ந்து கொடுக்கிற நேயம் விருந்தோம்பலில் தலைசிறந்ததாகும்.

**பசித்தவருக்கு நான் உணவிடுதல் :**

நான் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது ஒரு வயதானவர் மிகுந்த பசியின் களைப்பால் அவ்வழியில் சென்ற என்னிடம் 'பசிக்கிறது' என்று சொன்னார். அப்போது நான் அவரை என் வீட்டிற்கு அழைத்து சென்று, உணவிட்டு மகிழ்ச்சி அடைந்தேன். உணவருந்திய பின் அவர் முகத்தில் தோன்றிய நன்றி கலந்த புன்னகை கண்டு மனநிறைவு அடைந்தேன்.

**முடிவுரை**

வந்த விருந்தினர்களை அன்பாக கவனித்து அனுப்பிவிட்டு வருகின்ற விருந்தினர்களுக்காக வாசலில் சலிக்காது காத்திருந்தவர்கள் நம் முன்னோர்கள். அவர்களை போல நாமும் நம்மிடம் வருபவர்களுக்கு இல்லை என்று கூறாது, தம்மால் இயன்றதை செய்ய வேண்டும்.

**(கதைப்பகுதியையொட்டி உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)**

**(அல்லது)**

(ஆ) **இயல் – 8 : து–இராமானுசர் (நாடகம்)**

**இராமானுசர் நாடகத்தில் வெளிப்படும் மனிதநேயம்**

**முன்னுரை**

இறைவனை வழிபடுவதற்கு அறிவு வழியை விட இதய வழியே சிறந்தது என எண்ணிய இராமானுசர் தான் பெற்ற நலத்தை தானே வைத்துக்கொள்ள வேண்டும் என எண்ணாமல் தன்னலமற்ற பண்பு கொண்டு அவர்களது பிறவிப் பிணி நீங்க வழி செய்தார். இராமானுசரின் மனித நேயத்தைப் பற்றி இங்கு சுருக்கமாக பார்ப்போம்.

**தண்டும் கொடியுமாக :**

'திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும், கொடியுமாக இராமானுசரை வரச் சொல்லுங்கள்' என்று பூரணர் திருவரங்கத்திற்கு செய்தி அனுப்புகிறார். அதனால் இராமானுசர், திருவருளை பெற விரும்பும் கூரேசர், முதலியாண்டான் ஆகிய இருவரையும் தம்மோடு அழைத்துக்கொண்டு பூரணர் இல்லத்திற்கு வந்தார். அவர்களைக் கண்ட பூரணர் கோபம் கொண்டு "அம்மந்திரத்தை கூற உம்மை மட்டும் தானே அழைத்தேன், நீ உறவுகளுடன் ஏன் வந்தாய்?" என வினவினார். அதற்கு இராமானுசர் "தாங்கள் கூறிய தண்டு, கொடிக்கு இணையானவர்கள் இவர்கள். எனவே, கோபம் கொள்ளாது பரிவு கொண்டு திருவருள் புரிய வேண்டும்" என்று வேண்டினார்.

**குருவின் கட்டளை :**

பூரணர் மூவரையும் வீட்டிற்குள் அழைத்து "நான் கூறப் போகும் திருமந்திர மறைப் பொருள்கள் உங்கள் மூவருக்கு மட்டுமே தெரிய வேண்டும். வேறு யாரிடமாவது இதைக் கூறினால் அது ஆசிரியர் கட்டளையை மீறியதாகும். அப்படி நடந்தால் அதற்குத் தண்டனையாக நரகமே கிட்டும்" என்று திருமந்திரத்தை கூறினார். "திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்" என்று பூரணர் கூறிய திருமந்திரத்தை மூவரும் மூன்று முறை உரக்கச் சொல்லி விடைப்பெற்றார்கள். 8

**திருமந்திரத்தை மக்களுக்கு உரைத்தல் :**

திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவிலின் மதில் சுவரின் மேல் இராமானுசர் நின்று கொண்டு, உரத்த குரலில் பேசத் தொடங்கினார். "கிடைப்பதற்குரிய பிறவிப்பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை உங்களுக்குக் கூறுகிறேன். அனைவரும் இணைந்து மந்திரத்தைச் சொல்லுங்கள்" என்று அவர் திருமந்திரத்தை சொல்லச் சொல்ல அனைவரும் உரத்த குரலில் மூன்று முறை கூறினார்கள்.

**குருவின் கோபமும் ஆசியும் :**

குருவின் சொல்லை மீறியதற்காக கோபம் கொண்டு பூரணர் இராமானுசரை கேட்டதற்கு "கிடைப்பதற்குரிய மந்திரத்தைத் தங்களின் திருவருளால் நான் பெற்றேன். அந்த திருமந்திரத்தை அனைவருக்கும் கூறினால் துன்பத்தில் உழன்று பேதை வாழ்வு வாழ்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களின் பிறவிப்பிணி நீங்கி பேறு பெறுவார்கள்" என்று கூறினார். இராமானுசரின் பரந்த மனதைக் கண்ட பூரணர், அவரை மன்னித்து இறைவனின் ஆசி பெற அவரை வாழ்த்தினார். இராமானுசத்திற்குத் தன் மகன் சௌம்ய நாராயணனை அடைக்கலமாக அளித்தார்.

**முடிவுரை**

'நான் மட்டும் தண்டனைப்பெற்று நரகத்தைச் சேர்வேன். ஆனால் என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும். எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்' என்ற இராமனுசரின் செயலில் இருந்து பிறருக்காக நரகமும் செல்லத் துணிந்த அவரின் தன்னலமற்ற மனிதநேயப் பண்பானது வெளிப்படுகிறது.

**(கதைப்பகுதியையொட்டி உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)**

45. (அ)

**பொதுக்கட்டுரை**

**சான்றோர் வளர்த்த தமிழ்**

**முன்னுரை**

நம் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், பிறருடைய உணர்வுகளை நாம் புரிந்துகொள்ளவும் உதவுவது மொழியே ஆகும். நாகரிகம் வளர வளர, பேச்சு வழக்கு மொழியெல்லாம் எழுத்து வடிவம் பெற்றன. மொழி வளர்ச்சியின் தொடக்கத்தில் அரும்பணி புரிந்த சான்றோர்களின் தமிழ்ப்பணி குறித்து பின்வருமாறு காணலாம்.

**பைந்தமிழ் சிறப்பு :**

பண்டைய காலத்தில் வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரிமுனை வரை தமிழ் பரவியிருந்தது. காலங்கள் பல மாறினாலும், கண்டங்கள் பல அழிந்தாலும், அழியாத சிறப்புடைய மொழியாகத் தமிழ்மொழி திகழ்கிறது. செந்தமிழாய், வண்டமிழாய், பைந்தமிழாய் வலம் வரும் ஒரே மொழி தமிழ் மொழியாகும்.

**பிள்ளைத்தமிழுக்குக் குமரகுருபரர் :**

கடவுளரையோ மக்களுள் சிறந்தவரையோ குழந்தையாக எண்ணி, குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் அமையப்பாடுவது பிள்ளைத்தமிழ் ஆகும். பிள்ளைத்தமிழ் நூல்களில் சிறந்த நூலாகக் கருதப்படுவது குமரகுருபரர் முருகக் கடவுளைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் ஆகும்.

**சதகத்திற்கு முன்னோடி மாணிக்கவாசகர் :**

அகப்பொருள் பற்றியோ, புறப்பொருள் பற்றியோ நூறு செய்யுள்களில் உரைப்பது சதகம் எனப்படும். தமிழில் தோன்றிய முதல் சதகம் மாணிக்கவாசகரின் திருச்சதகம் ஆகும்.

**பரணிக்கோர் செயங்கொண்டார் :**

போரிலே ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிபெறும் வீரர்கள்மேல் பாடப்படுவது பரணி இலக்கியமாகும். செயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப்பரணி, பரணி இலக்கியங்களில் சிறப்பானது ஆகும். 8

**கலம்பகத்திற்கு இரட்டையர்கள் :**

இறைவனையோ, அரசனையோ, தலைவனாகக் கொண்டு பல வகை செய்யுள்களைக் கலந்து பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம் ஆகும். இவை, பலவகைப் பாக்களாலும், பாவகைகளாலும் பாடப்படுகிறது. முதுசூரியர், இளஞ்சூரியர் என்ற இரட்டையர்களால் பாடப்பெற்ற தில்லைக்கலம்பகம் மிகச்சிறப்பானது ஆகும்.

**கோவை, உலா, அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர் :**

கோவை என்றால் வரிசை; வரிசையாகக் கோக்கப்பட்டது என்று பொருள். இலக்கியங்களில் அகப்பொருள் நிகழ்ச்சிகளையோ, புறப்பொருள் நிகழ்ச்சிகளையோ வரிசையாகப் பாடுவதால் கோவை எனப்பட்டது. உலா என்பது, பாட்டுடைத்தலைவன் உலா வருதலும் அவனைக்கண்டு ஏழு பருவ மகளிர் மனம் மகிழ்தலும் உலா இலக்கியம் ஆகும். ஒரு செய்யுளின் இறுதியில் உள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்து வரும் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது அந்தாதி ஆகும். இம்மூன்று சிற்றிலக்கிய வகைகளைப் பாடுவதில் ஒட்டக்கூத்தர் மிகவும் திறமையானவர் ஆவார்.

**முடிவுரை**

தமிழ் தனித்தியங்கும் இயல்புடையது. காலத்தால் அழியாத கன்னித் தமிழாய் இளமையுடன் திகழக்கூடியது. தமிழின் தொன்மையும் தூய்மையும் வண்மையும் வனப்பும் உலக அளவில் உள்ள அனைவரையும் ஈர்த்துள்ளது. தமிழ் வளர்ச்சிபெற இளைய தலைமுறையினரான நாம் நாளும் சான்றோர் வழி தொண்டாற்றுவோம்!

***தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்!***

**(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)**

**(அல்லது)**

(ஆ) **பொதுக்கட்டுரை**

**விசும்பின் துளியும் பசும்புல் தலையும்**

**முன்னுரை**

சுற்றுச்சூழல் என்பது ஓர் உயிரினத்தைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலைக் குறிக்கிறது. மாறியும் மாறாமல் நிலைத்தும் இருக்கின்ற பலவகைத் தோற்றங்களைக் கொண்டுள்ள இயற்கை, மனித வாழ்க்கையிலிருந்து தவிர்க்க முடியாதது.

**இயற்கையோடு இயைந்து வாழ்வோம் :**

- நம் முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றிப் பிணைந்து வாழ்ந்து உள்ளனர், இயற்கை வளங்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் ஊறு விளைவிக்காமலும் அவற்றைப் பாதுகாக்கும் செயல்களையும் செய்து வந்துள்ளனர். வீட்டு முற்றங்களில் மாட்டுச்சாணி அல்லது மஞ்சள் கரைத்துத் தெளித்து அரிசி மாவினால் கோலமிட்டு எறும்புகளுக்கு உணவு அளித்தனர்.
- குழந்தைகள் விளையாட நுங்கு வண்டி, களிமண் பொம்மைகளை அவர்களே உருவாக்கினர். இன்று பெரும்பாலான விளையாட்டுப் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்கும் பாலிதீனால் ஆனவை. முன்பு மிட்டாய்களும், கருப்பட்டிகளும் பனை ஓலைப் பெட்டியில் பொதிந்து தரப்பட்டன.
- ஆனால், இன்று நவீனமயமாக்கலாலும், தொழில்துறை வளர்ச்சியாலும் இயற்கையை மறந்து இயற்கை வழங்கும் சேவைகளையும் கருத்தில் கொள்ளாமல் இயற்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் மனிதகுலம் ஈடுபடுகிறது.

**மழைநீரைச் சேமிப்போம் :**

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு."

நம் முன்னோர்கள் நமக்கு வெட்டி வைத்த ஏரி, குளம், கண்மாய்களைப் பாதுகாத்தாலே மழைநீரை எளிதாகச் சேமிக்க முடியும். வீடுகள்தோறும் மழைநீர் சேமிப்புத் தொட்டி அமைப்பதைக் கட்டாயமாக்க வேண்டும். மழைநீரைச் சேமிக்க ஏதுவாக நீர்நிலைகளைப் பொது மக்களே அரசை எதிர்பார்க்காமல் சீரமைக்க வேண்டும். **8**

**பாதுகாப்பான குடிநீர் :**

தற்போது உலகில் மூவரில் ஒருவருக்குப் பாதுகாப்பான குடிநீர் உறுதி செய்யப்படவில்லை என ஆய்வு ஒன்று குறிப்பிடுகிறது. நிலத்தடி நீரின் அளவும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன. மேலும் 2050ஆம் ஆண்டு உலகம் மிகப்பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும் அதுவும் நீருக்காக என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

**மரம் வளர்ப்போம் :**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்! என்பதற்கிணங்க மரங்கள் நமக்கு மழையைத் தருகிறது. புவி வெப்பமாதலுக்கு முதன்மையான காரணம், பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றம், அவற்றில் முக்கியமாக கார்பன்-டை-ஆக்சைடின் விகிதாச்சார அளவு அதிகரிப்பது. ஒளிச்சேர்க்கை செய்யும் உயிர்களைத்தவிர மற்ற அனைத்தும் கார்பன்-டை-ஆக்சைடை வெளியேற்றுபவையாகவே உள்ளன, அத்தோடு மனிதர்களின் உருவாக்கங்களும் கார்பனை வெளியேற்றுகின்றன. பூமியில் இவை அனைத்திற்கும் எதிராக கார்பன், ஆக்சிஜன் விகிதாச்சாரத்தைச் சமன் செய்யப்போராடுவது மரங்கள் மட்டுமே!

**முடிவுரை**

இப்பூமியில் மனித இனம் வாழ முடியும். "காக்கை குருவி எங்கள் ஜாதி; நீர் மலையும் கடலும் எங்கள் கூட்டம்" என்ற பாரதியின் பாடலுக்கேற்ப இயற்கையுடன் இணைந்த வாழ்வை, மனிதன் வாழக் கற்றுக் கொள்ளவேண்டும்.

**(உட்தலைப்புகளின் கீழ் பொருத்தமான கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்குக)**